# மே – 22 – புதன்

## காசியா சபை புனித றீத்தா – துறவி

**“நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள்.” யோவா 16:4**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி15 : 1 – 6

அக்காலத்தில்யூதேயாவிலிருந்து வந்த சிலர், நீங்கள் மோசேயின் முறைமைப்படி விருத்தசேதனம் செய்துகொள்ளாவிட்டால் மீட்படைய முடியாது” என்று சகோதரர் சகோதரிகளுக்குக் கற்பித்து வந்தனர்.அவர்களுக்கும் பவுல், பர்னபா ஆகியோருக்குமிடையே பெருங் கருத்து வேறுபாடும் விவாதமும் உண்டாயின. எனவே பவுலும் பர்னபாவும் அவர்களுள் சிலரும் எருசலேமுக்குச் சென்று, திருத்தூதர்களிடமும், மூப்பர்களிடமும் இந்த சிக்கலைக் குறித்துக் கலந்து பேசுமாறு நியமிக்கப்பட்டனர்.அங்கிருந்து திருச்சபையார் அவர்களை வழியனுப்பி வைத்தனர். அவர்கள் பெனிசியா, சமாரியா வழியாகச் சென்று பிற இனத்தவர் மனந்திரும்பிய செய்தியை எடுத்துரைத்தார்கள். இது சகோதரர், சகோதரிகள் அனைவரிடமும் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர்கள் எருசலேம் வந்தபோது திருச்சபையாரும், திருத்தூதர்களும், மூப்பர்களும் அவர்களை வரவேற்றார்கள். அப்போது கடவுள் தங்கள் வழியாகச் செய்த அனைத்தையும் அவர்கள் அறிவித்தார்கள்.ஆனால் பரிசேயக் கட்சியினருள் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்ட சிலர் எழுந்து, ”அவர்கள் விருத்தசேதனம் செய்து கொள்ளவேண்டும் மோசேயினது சட்டத்தைக் கடைப்பிடிக்க அவர்களுக்குக் கட்டளையிட வேண்டும்” என்று கூறினர்.இதனை ஆய்ந்து பார்க்கத் திருத்தூதரும்இ மூப்பரும் ஒன்று கூடினர்.

**பதில்பாடல் :** அகமகிழ்ந்து ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்.

### நற்செய்தி : யோவான் 15 : 1 - 8

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது : ”உண்மையான திராட்சைச் செடி நானே. என் தந்தையே அதை நட்டு வளர்ப்பவர்.என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் அவர் தறித்துவிடுவார். கனிதரும் அனைத்துக் கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார்.நான் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கெனவே தூய்மையாய் இருக்கிறீர்கள்.நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்களும் என்னோடு இணைந்து இருங்கள். கொடி திராட்சைச் செடியோடு இணைந்து இருந்தாலன்றித் தானாக கனிதர இயலாது. அதுபோல நீங்களும் என்னோடு இணைந்திருந்தாலன்றிக் கனிதர இயலாது.நானே திராட்சைச் செடி் நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும். நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது” என்றார்.

**தியானம்:** ஒரு மனிதரோ, சமுதாயமோ நாடோ தனித்து இயங்க முடியாது. பலர் இணைந்த அமைப்பாகத்தான் இயங்க முடியும். ஒருவரை சார்ந்து வாழ்ந்தால் தான் அது குடும்பம். ஒவ்வொருவரும் தமது வழியில் சென்றால் அது குடும்பம் அல்ல. திருச்சபையும் ஒரு குடும்பமே. அது தனித்து வாழ முடியாது. பலர் பலவிதமான எண்ணங்களுடன், சிந்தனைகளுடன் இருப்பார்கள். அனைவரையும் அணைத்து செல்ல வேண்டும். தற்போதைய திருத் தந்தை அனைவரையும் அணைத்து செல்வதால் பலரும் அவரை பாராட்டுகின்றார்கள். அண்மையில் அவர் துபாய் சென்றிருந்தார். பொதுவாகவே துபாய் முஸ்லிம் மக்கள் அதிகமாக வாழும் நாடு. ஆனால் அங்கே பல மதத்தவர்களும் சுதந்திரமாக வாழ்கின்றார்கள். மற்றைய முஸ்லிம் நாடுகளில் உள்ள கட்டுப்பாடுகள் அங்கே குறைவு. அந்த நாடு திருத்தந்தையை வரவேற்ற விதமும், நடத்திய விதமும் உண்மையில் மெய் சிலிர்க்க வைத்தது. இதுதான் ஒரு ஆயனுக்கு அழகு. அவர் பலரால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றார். திருச்சபையில் நடந்த தவறுகளை ஏற்றுக்கொண்டு அவர் மன்னிப்பும் கேட்டார். இதனைத்தான் கிறிஸ்த்தவம் எம்மிடம் எதிர்பார்க்கின்றது. மனம் வருந்துவதும் மன்னிப்பு கேட்பதும் மிக முக்கிய மானது. இன்றைய நாளில் நாம் நினைவு கூரும் புனிதரான றீற்றா தமது கணவனால் கொடுமைப் படுத்தப்பட்ட போதும் அவரது மனமாற்றத்திற்காக மன்றாடினார். கணவனை கொலை செய்தவர்களை மன்னித்தார். கணவனை கொண்றவர்களை பழிவாங்க வேண்டும் என்று நினைத்த பிள்ளைகளை தடுத்தார். அது முடியாமல் போக அவர்களை எடுத்துக்கொள்ளும்படி கடவுளிடம் வேண்டியதாக அவரின் வரலாறு குறிப்பிடுகின்றது. கணவன், பிள்ளைகள் இறந்த பின்புதான் அவர் துறவற சபையில் இணைந்தார். இணைந்திருப்பதும், மன்னிப்பும் எமது வாழ்வில் முக்கியமான ஒன்று என்பதை உணர்ந்து வாழ்வோம்.